பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 14 புதன்கிழமை 27.01.2021 கதிர் 314

## மேலுமொரு இராஜாங்க அமைச்சர் கொரோனாத் தொற்றால் பாதிப்பு!

இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது. இதன்படி இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்வடைந்துள்ளது.

### சுமந்திரனின் சட்டவாதத்தை அடுத்து

# வெடுக்குநாறிமலை பூசகர் குழு மீதான குற்றப்பத்திரத்தை நிராகரித்தது மன்று!

### பிணை அனுமதியும் வழங்கியது

**நெடுங்கேணி, ஜனவரி 27**

**நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவில் வெடுக்குநாறிமலைப் பகுதி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் தொல்பொருள் சின்னங்களைச் சேதப்படுத்தினர் எனத் தொல்பொருள் திணைக்களத்தால் வவுனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சந்தேகத்தின் பெயரில் கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆலய பூசகர் உட்பட மூவரும் இன்று வவுனியா நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.**

2



## யாழ். மேயர் மணிவண்ணன் வெற்றி நடை: நிறைவேற்றப்பட்டது வரவு – செலவுத்திட்டம்

### ஆதரவு 26; எதிர்ப்பு 03; நடுநிலை 15
### முன்னாள் மேயர் ஆனோல்ட் மாயம்



யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான புதிய வரவு - செலவுத் திட்டம் இன்று நிறைவேற்றப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 26 வாக்குகளும், எதிராக 3 வாக்குகளும் அளிக்கப்பட்டதுடன் 15 பேர் நடுநிலை வகித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயராகப் பதவி வகித்த இ.ஆனோல்ட் சமர்ப்பித்த 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரு தடவைகள் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து அவர் பதவி இழந்தார்.

அதன்பின் னர் நடைபெற்ற மேயர் தெரிவில் இ.ஆனோல்ட் மற்றும் வி.மணிவண்ணன் ஆகியோர் போட்டியிட்டனர். அதில் வி.மணிவண்ணன் மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதையடுத்து அவரால் இன்று புதிய வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

45 உறுப்பினர்களைக் கொண்ட யாழ்ப்பாணம் மாநகர சபையில் இன்று மாலை இடம்பெற்ற வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். ஒருவர் ஆதரவாக வாக்களித்தார். முன்னாள் மேயர் இ.ஆனோல்ட் இன்று சபைக்கு

2



## இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழ் நகரில் ஆர்ப்பாட்டம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியை இன்று (புதன்கிழமை) முன்னெடுத்துள்ளனர்.

யாழ். பண்ணையில் அமைந்துள்ள கடற்றொழில், நீரியல் வளத் திணைக்கள முன்றலில் இன்று முற்பகல் 10.45 மணியளவில் ஆரம்பமான இந்தப் பேரணி, யாழ். மாநகரம் ஊடாக

2

## 3 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்க சீனா தீர்மானம்

இலங்கைக்கு கொரோனா வைரஸுக்கு எதிரான 3 லட்சம் தடுப்பூசிகளை வழங்க சீனா முன்வந்துள்ளது.

சீனாவின் சினோபார்ம் நிறுவனம் தயாரித்துள்ள தடுப்பூசிகளே, இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன என்று சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடுப்பகுதியளவில் சீனாவின் தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையுடன் நீண்ட கால நற்புறவைப் பேணி வரும் சீனா, கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்திலும் இலங்கைக்கு ஒத்துழைக்கவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்தில் 20 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் உலக நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துறைமுக ஊழியர்கள் நாளை முதல் சட்டப்படி வேலை செய்யும் போராட்டம்

### கோட்டா அரசுக்குத் தொடரும் தலையிடி

இலங்கை துறைமுக ஊழியர்கள் நாளை முதல் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை முதலீட்டு நடவடிக்கைகளுக்காக இந்தியாவுக்கு கையளிப்பதற்கான கோட்டாபய அரசின் தீர்மானத்துக்கு எதிராகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது எனக் கிழக்கு முனையத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்துக்குத் துறைமுக தொழிற்சங்கங்கள் பல ஆதரவளிக்கவுள்ளன என்று கிழக்கு முனையத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

2

## மீனவர் பிரச்சினைக்கு வருட இறுதிக்குள் தீர்வு

### அமைச்சர் டக்ளஸ் உறுதி



**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

இந்த வருட இறுதிக்குள் கடற்தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். இந்திய மீனவரின் அத்துமீறல் தொடர்பில் பேச்சு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. நல்ல முடிவு எட்டப்படும். அத்துடன்

2

# வெளிநாட்டில் பணிபுரிபவர்களை நாட்டுக்கு அழைக்க நடவடிக்கை

### அலரி மாளிகை கூட்டத்தில் மஹிந்த தெரிவிப்பு



நாடுதிரும்புவதற்கு எதிர்பார்த்துள்ள வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கைப் பணியாளர்களை அழைத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தினார்.

வெளிநாட்டில் பணிபுரியும்

2

## கொழும்பில் 26 நாள்களில் 4,917 பேருக்கு கொரோனா

கொழும்பு மாவட்டத்தில் நேற்று மாத்திரம் 369 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடந்துள்ள 26 நாள்களில் மாத்திரம் கொழும்பு மாவட்டத்தில் 4 ஆயிரத்து 917 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

2

## வெடுக்குநாறிமலை பூசகர் குழு மீதான .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொல்பொருள் சின்னங்களைச் சேதப்படுத்தியதாகத் தொல்பொருள் திணைக்களத்தால் ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் ஆஜராகவில்லை எனத் தெரிவித்து கடந்த 22 ஆம் திகதி வழக்கில் ஆஜராகியிருந்த பூசகர் உட்பட்ட மூவரையும் 27 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் இந்த வழக்கு இன்று நீதிமன்றத்தில்விசாரணைக்குஎடுக்கப்பட்ட போது சந்தேக நபர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

வழக்கின் பின்னர் சுமந்திரன் ஊடகங்களுக்கு குறித்த வழக்கு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் -

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் சம்பந்தமாக ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள். இந்த வழக்கு ஆரம்பத்திலே குற்றவியல் சட்ட கோவையின் 106 ஆவது பிரிவின் கீழே பொதுமக்களுக்கு இடையூறு செய்வதான வழக்காகவே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் தொல்லியல் பணிப்பாளர் நாயகம் ஒரு சான்றிதழ் கொடுத்திருந்தார்.

இந்த விடயம் ஒரு தொல்லியல் பெறுமதிவாய்ந்த இடம்என்று தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் 15டி பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டதன் காரணமாக ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள் சென்ற தடவை நீதிமன்றத்துக்கு வந்த போது அவர்களுக்கு எதிராக பிடியாணை இருந்தது எனத் தெரிவித்து இன்று வரை மூவரும் விளக்கமறியலிலேயே இருந்தார்கள். அதற்கு முன்னர் இந்த மூவரும் பிணையிலேயேசெல்லஅனுமதிக்கப்பட்டிருந்தவர்கள்.

இன்றைய வழக்கில் பொலிஸார் சார்பில் குற்றப்பத்திரிகை ஒன்று நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டது. இதன் போது தொல்லியல் பொருள்களைச் சேதமாக்கினார்கள் என்ற ரீதியிலும், தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் கீழே ஒருவர் குற்றம் சாட்டப்பட்டால் அவருக்குப் பிணை வழங்க முடியாது என்பது அனைவருக்கு தெரிந்த விடயம். குற்றப்பத்திரிகை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அல்லது சந்தேக நபர்களுக்கு கையளிக்கப்படுவதை நாங்கள் எதிர்த்து வாதிட்டோம்.

ஒரு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது வழக்கு தொடுநர் அல்லர். வழக்கு தொடுநர் அதனை வரைந்து நீதிமன்றத்துக்குக் கொடுத்தால் கூட அதன் முழுப்பொறுப்பு நீதிமன்றத்தையே சாரும். நீதிவான் அவ்வாறு ஒருவரை குற்றம் சாட்டுவதற்குப் போதுமான ஆதாரம் இருந்தால் மாத்திரமே அந்த குற்றப்பத்திரத்தைக் கையொப்பம் இட்டு அவருக்கு வழங்குவார்.

ஆனால் இந்த வழக்கிலே ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினர் என்ற காரணத்தால் அவர்களுக்கு எதிராக இந்தக் குற்றப்பத்திரிகை வரையப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதாக நாங்கள் மன்றுக்குத் தெரிவித்திருந்தோம். அதுமட்டுமன்றி சேதம் விளைவிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற மரத்தினாலான ஏணியை அகற்றி இரும்பினாலான ஏணியை வைத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது.

இங்கே தொல்பொருள்மிக்கதான மலையை சேதப்படுத்தியது. அன்றி மரத்தாலான ஏணியை அப்புறப்படுத்தி விட்டு இரும்பினாலானஏணியைஉருவாக்கினார்கள்என்பதுதான் இவர்களது குற்றச்சாட்டாக உள்ளது.

ஆனால் மரத்தினாலான ஏணிக்குப் பதிலாக இரும்பாலான ஏணியை செய்வதற்கு 2018 ஆம் ஆண்டில் இருந்து வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு அந்த நிதியை பிரயோகிக்குமாறு கடிதம் வழங்கப்பட்டமைமட்டுமல்லாது அந்தவிடயத்தை விரைவாகச் செய்து கணக் கறிக்கையைச் சமர்ப்பிக்கு மாறு பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலே இது சம்பந்தமான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க காலத்தில் பிரதமர் அலுவலகத்தில் இருந்து இந்த ஆலயத்தின் வழிபாட்டுக்கு தொல்லியல் திணைக்களமும், பொலிஸாரும் அறிவுறுத்தல் வழங்கிய கடிதமும் உள்ளன. ஆகவே இந்த ஆவணங்களை எல்லாம் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்த போது நீதிமன்றம் அவற்றைப் பார்வையிட்டு வழக்கு எப்படியாக ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் குறிப்பிடப்பட்ட மரத்திலான ஏணிக்கு யார் சேதத்தை விளைவித்தார்கள் என்பதில் தெளிவில்லை என்றும், கொடுக்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் அரசாங்கமே இதனைத் திருத்தி அமைக்கும் செயற்பாட்டில் இறங்கியுள்ளது என் பதில் புலனாகுவதன் காரணமாகவும், யார் எவ்வாறான சேதங்களை விளைவித்தார்கள் என்ற ஆதாரங்கள் இல்லாத காரணத்திலும், ஆலய நிர்வாக சபையினர் என்பதனால் மாத்திரம் அவர்களுக்கு எதிராக இவ்வாறான குற்றப் பத்திரிகையை நீதிமன்றம் சமர்ப்பிக்க முடியாது என்றும், ஆகவே தொடர்ச்சியாக புலன் விசாரணை மேற்கொள்ளுமாறும், இது அரச அதிகாரிகள் செய்திருந்தாலும் கூட யார் செய்திருந்தார்கள் என்பதனை நீதிமன்றத்திற்கு சரியாக அறிக்கையிடுமாறும், தொல்லியல் கட்டளைச்சட்டத்தின் கீழ் இந்த விவரங்கள் கொடுக்கப்படாதகாரணத்தினால் குற்றவியல் சட்டக்கோவை 102இன் கீழ் நீதிவானுக்கு குற்றப்பத்திரிகை ஒன்றை தாக்கல் செய்வதற்கு போது மான அதிகாரம் இல்லை என்று தீர்மா னித்து குற்றப்பத்திரிகை நிராகரிக்கப்பட் டுள்ளது.

வழக்கினை தொடர்ந்து புலன் விசாரணை செய்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் குற்றப்பத்திரிகை நிராகரிக்கப்பட்டதன் அடிப்படையில் ஏற்கனவே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட அந்த மூவரும் தொடர்ந்தும் அதே நிபந்தனையில் நிற்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை வழக்கு நீண்ட திகதி இடப்பட்டு மே மாதம் 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இது ஒரு வழிபாடு சுதந்திரம் தொடர்புடைய விடயம். நீதிமன்றத்திலே நான் சமர்ப்பணங்களை செய்கின்ற போது அரசமைப்பின் கீழ் பூரண சுதந்திரம் வழிபாட்டு ஸ்தலங்களுக்குகொடுக்கப்பட்டுள்ளதுஎன்பதை நினைவூட்டினேன்.

தொல்லியல் பெறுமதிமிக்க இடமாக இருந்தாலும் அது ஒரு வழிபாட்டு ஸ்தலமாக இருந்தால் அங்கே வழிபடுவர்கள் செல்வதற்குபூரணசுதந்திரம்இருக்கின்றது. இல்லை என்றால் எவரும் ருவண்வெலி சாயாவுக்கு போக முடியாது. ஸ்ரீமாபோதிக்கு போக முடியாது, பொலனறுவையில் இருக்கின்ற எந்தப் புராதன இடங்களிற்கும் போக முடியாது. வழிபடவும் போக முடியாது. ஆகையினால் புராதன இடமாக இருந்தாலும் கூட அது வழிபாட்டு சுதந்திரத்தை தடுக்க முடியாது என்ற சமர்ப்பணத்தை செய்திருந்தேன்.

அடிப்படை உரிமையை தடுக்கிறதான இந்த செயற்பாட்டிற்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றினை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இந்த கிழமை தயாரான நிலையில் குறித்த வழக்கு குறுக்கிட்டதன் காரணமாக இந்த வழக்கு விடயங்களையும்அதிலேசேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அது தாமதமாகியிருப்பதாக நீதிமன்றத்திலே நான் சொல்லியிருக்கிறேன்.

அந்த ஆவணங்கள் தயாராக இருக்கின்றன. இந்த நீதிமன்றத்தின் கட்டளையையும், வழக்கு நடவடிக்கை கோவை முழுவதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி கிடைத்த பின்னர் அதையும் இணைத்து ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கின்ற அடிப்படை உரிமை மீறல் வழக்கை உயர் நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டு இங்கே வழிபடுவதற்கு தடையேற் படுத்தக்கூடாது என்றநிவாரணத்தைபெற்றுக்கொடுப்போம்.

இன்றைய நீதிவானுடைய முடிவு எங்களுக்கு பெரும் ஆறுதலைக் கொடுக்கின்றது. ஏனென்றால் தொல்லியல் கட்டளைச்சட்டத்தை தவறாகப் பிரயோகித்து அதன் கீழே பிணை கொடுக்க முடியாது என்கின்ற ஏற்பாட்டை காரணமாக வைத்து எங்களது பாரம்பரிய வழிபாட்டு தலங்களை முடக்குவதும் அதற்கு பாதகம் விளைவிக்கின்ற இந்த அரசின் செயற்பாட்டிற்கு அதற்கு எதிரான முதற்படியான வெற்றி கிடைத்திருக்கிறது. ஆகவே ஆலய நிர்வாகத்தினர் சுதந்திரமாக நடமாட முடியும். அதுதான் எங்களது பிரதான நோக்கமாக இருந்தது. அதிலே நாங்கள் வெற்றி கண்டிருக்கிறோம். தொடர்ச்சியாக ஆதிலிங்கேஸ்வரர் விடயத்திலே வழிபட விரும்புபவர்கள் எவரும் வழிபடக்கூடிய வகையிலே சட்டத்தின் துணையோடு அதனை உறுதி செய்வோம் என்பதையும் சொல்லி வைக்க விரும்புகிறேன். - எனத் தெரிவித்தார்.

குறித்தவழக்கில்ஜனாதிபதிசட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனுடன் சிரேஷ்ட சட்டத்தரணி க. தயாபரன், அன்டன் புனிதநாயகம், குரூஸ் மற்றும் கேசவன் சயந்தன் உட்பட்ட சட்டத்தரணிகள் குழுவும் ஆஜராகியிருந்தனர்.

## இந்திய மீனவர்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரானி வீதியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தை வந்தடைந்தது.

இதன்போது போராட்டக்காரர்கள் தமது கோரிக்கை மனுவை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கினர்

## வெளிநாட்டில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாளர்களை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டில் பணிபுரியும் ஏராளமான இலங்கைப் பணியாளர்கள் நாட்டுக்குத் திரும்புவதற்கு முடியாமல் தவிப்பதாக இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்துவதற்கான ஜனாதிபதி செயலணியுடன் கலந்துரையாடி இப்பணியாளர்களை விரைவில் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார்.

இப்பணியாளர்களை அழைத்துவரும் பயணிகள் விமானங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளல் தொடர்பிலும் இதன்போது கவனத்தில் கொள்ளப்பட்டது.

இவ்வாறு அழைத்து வரப்படுபவர்களைத் தத்தமது இல்லங்களின் இட வசதிக்கேற்ப தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கான அனுமதியைப் பெற முடியுமா என்பது குறித்தும் ஜனாதிபதிசெயலணியின்கவனத்துக்குக்கொண்டு செல்லப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதுவரை வெளிநாட்டில் பணியாற்றும் 32 ஆயிரம் இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன், மேலும் 22 ஆயிரத்து 483 பேர் தமது சொந்த நாட்டுக்கு வருகை தருவதற்கு எதிர்பார்த்துள்ளனர்.

தனிமைப்படுத்தல் நிலையங்களின் இடவசதியைக் கருத்தில்கொண்டு இதுவரை அப்பணியாளர்களுக்கு நாட்டுக்கு வருவதற்கான விமான சேவை வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன என்று ஸ்ரீலங்கன் விமான சேவையின் தலைவர் அசோக் பதிரகே அவர்கள் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பின்போது இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்தே, ஸ்ரீலங்கன் விமான சேவையின் தலைவர் அசோக் பதிரகே உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மீனவர் பிரச்சினைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூரிலும் சட்டவிரோத தொழில்முறை நிறுத்தப்படவேண்டும்.

- இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழிலில் ஈடுபடுவதை இந்திய மீனவர்கள் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், தமது கோரிக்கை மனுவை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடல் வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்தியாவில் கடல் வளங்கள் அழிக்கப்பட்டமையால் அங்குள்ள மீனவர்கள் அத்துமீறி எமது பகுதிக்குள் வருகின்றார்கள்.

அத்துமீறி சட்டவிரோத தொழில் செய்வதை அனுமதிக்க முடியாது. இதற்குப் பேச்சு மூலம் தீர்வுகாணப்படும்.

வடபகுதி மீனவர்களின் வாழ்வாதரத்தை உயர்த்துவதற்கு பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை விரைவில் வழங்கப்படும். இந்த ஆர்ப்பாட்டத்தை நான் செய்வதாக உங்களில் உள்ள கறுப்பு ஆடு இந்தியத் தூதருக்குக் கூறியதாகக் கூறப்படுகின்றது. அத்தகைய தேவை எனக்கில்லை. நான் நல்லுறவையே விரும்புகின்றேன் - என் றார்.

இதன்போது யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் -

எமது நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வு கேட்டே நாம் போராடுகின்றோம். எமது இந்தப் போராட்டத்தை அரசியலுக்காகச் செய்வதாகச் சிலர் கூறியுள்ளனர். எங்களுக்கு அவ்வாறு செய்ய வேண்டிய தேவையில்லை. அத்துமீறி தொழில் செய்வதால் எமது கடல் வளம்தான் பாதிக்கப்படுகின்றது. அதனால் எமது அன்றாட பொருளாதாரம் பாதிக்கப்படுகின்றது.

கடல் வளம் பாதிக்கப்படுவதால் எமது எதிர்காலச் சந்ததிக்கு எதனைக் கொடுக்கப் போகின்றோம்? இதற்காகத்தான் நாம் போராடுகின்றோம். எங்களின் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தருமாறு அனைத்துத் தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றோம். ஆனால், சிலர் எங்கள் மீது அரசியல் செய்கின்றார்கள். அடுத்துவரும் காலங்களில் அவர்களுக்குப் பதில் சொல்லுவோம். எங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

நாங்கள் இந்தியாவுக்கு எதிராகவோ - தமிழ்நாட்டுக்கு எதிராகவோ போராடவில்லை. மாறாக அத்துமீறி இடம்பெறும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைக்கு எதிராகவே போராடுகின்றோம் - என்றார்.

## கொழும்பில் 26 நாள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, 2020 ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் இன்று காலைவரையான காலப்பகுதியில் (மூன்றாவது அலை) கொழும்பு மாவட்டத்தில் 22 ஆயிரத்து 61 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## துறைமுக ஊழியர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு முனைய விவகாரம் தொடர்பாக அரசுடன் பலதடவைகள் கலந்துரையாடிய போதும், அரசு தமது நிலைப்பாட்டில் இருந்து மாறாமல் இருக்கும் நிலையில், அதற்கு எதிராக ஆரம்ப கட்டமாக சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவ்வாறான போராட்டம் தொடர்பாக இதுவரையில் தங்களுக்கு அறிவிக்கப்படவில்லை எனவும், துறைமுகப் பணிகள் அத்தியாவசிய சேவைகள் என்பதனால் இது தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் துறைமுக அதிகார சபையின் தலைவர் ஜெனரல் தயாகமகே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கொழும்புத் துறைமுக கிழக்கு முனையம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து, நாளைமறுதினம் ஜனாதிபதிக்கும், ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். மேயர் மணி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவில்லை. அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்கள் எதிராகவும், அக்கட்சியின் 10 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர்.

ஈ.பி.டி.பி. உள்ளிட்ட ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதன்படி 23 மேலதிக வாக்குகளால் வரவு -செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மனித உரிமைகள் ஆணையாளரை இலக்கு வைக்கும் கொழும்பு அரசு

மனித உரிமைகள் ஆணையாளரை இலக்கு வைக்கும் கொழும்பு அரசு இலங்கையின் பேரினவாத அரசு தொடர்பில் இப் பத்தியில் பல தடவைகள் இரண்டு பேச்சு மொழிகளை அடிக்கடி குறிப்பிடுவோம்.

ஒன்று – கெடுபிடி சொற் கேளாது.

மற்றது – கெடுவான் கேடு நினைப்பான்.

தொடர்ந்தும் அப்படித்தான் நடந்து கொள்கின்றது கோட்டாபய அரசு.

அடுத்த மாதம் ஜெனிவாவில் கூடவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46 ஆவது அமர்வில் இலங்கைப் பிரச்சினையும் முக்கியமாக எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

ஏதோ ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானங்களைத் தூக்கிக் கடாசி விட்டு சுதந்திரமாக – சுயாதீனமாக – தனித்துவமான – இறையாண்மையுடன் தம்மிஷ்டப்படி செயற்படுவோம் என்று மிதப்போடும் திமிர்த்தனத்தோடும் எடுத்தெறிந்து சூளுரைத்து வந்த கோட்டா அரசின் சண்டித்தனப் பாணி, அமர்வுக்கான நாள் கிட்டக் கிட்டத் தளர்கின்றது. சுருதி குறைகின்றது. தடுமாற்றமும் பதற்றமும் தெரிகின்றன.

யுத்தத்தின் போது பொதுமக்களின் ஒரு சொட்டு இரத்தமும் சிந்தப்படவேயிவில்லை என்று முன்னர் அடித்துக் கூறியிருந்தார் கோட்டாபய ராஜபக்ஷ.

யுத்தத்தில் பொதுமக்கள் இழப்பு பூஜ்ஜயம் (Zero Casuality) என்றும் கூட பெரும் பீலா விட்டார்.

இப்போது, யுத்தத்தில் ஏதோ தவறு நடப்பது வழமைதான், அதை ஆராய்கின்றோம் என்று இறங்கி வந்து, சர்வதேசத்தின் காதுகளில் பூச்சுற்றும் விதத்தில் கதை விடுகின்றார் அரசுப் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல.

அதிலும் விட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொள்ளும் நடிப்பு – சுத்துமாத்து நடவடிக்கை – நடிகர் திலகம் சிவாஜி கணேசனை வென்ற பம்மாத்து.

யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே விசாரித்து அறிக்கைகள், பரிந்துரைகளைச் சமர்ப்பித்த ஆணைக் குழுக்கள், விசாரணைக் குழுக்களின் அந்த அறிக்கைகளைப் பரிசீலித்து, மனித உரிமைகள் மீறப்பட்டனவா என்று ஆராய்ந்து, தமக்குப் பரிந்துரை செய்வதற்காம் இந்தப் புதிய ஆணைக்குழு.

கள முனையில் நடந்தவை எவையும் அந்த யுத்தத்தை வழி நடத்திய அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷக்குத் தெரியாதாம். அதனால்தான் அவை குறித்து முன்னர் விசாரணைகள் நடத்திய ஆணைக்குழுக்கள், விசாரணைக் குழுக்களின் அறிக்கைகளில் அப்படி ஏதும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விவரங்கள் உள்ளனவா என்று தேடிப்பார்க்க இப்போது ஆணைக்குழுவாம். அவற்றில் என்ன உள்ளன என்பது இதுவரை அவருக்குத் தெரியாதாம்.

யுத்தம் முடிந்து கடந்த பதினொரு ஆண்டுகளாக இலங்கை அரசுகள், சர்வதேசத்தின் காதில் சுற்றிய பூவினால் அதன் காது நிறைந்து விட்டது. இப்போது உச்சக் கட்டமாக ஒரு பெரிய பூச்சரத்தை சர்வதேசத்தின் காதில் சுற்ற கோட்டாபய ராஜபக்ஷ முயற்சிக்கின்றார். ஆனால் அந்த முயற்சி வெற்றிகரமாக முன் நகராது என்கின்றன விடயமறிந்த ஜெனிவா வட்டாரங்கள்.

அமெரிக்கப் பின்புல ஆதரவோடு பிரிட்டன், கனடா, மொண்டிநிக்ரோ, ஜேர்மனி போன்ற நாடுகள் இம்முறை கொண்டு வரும் பிரேரணையின் வாசகங்களை முழுமையாக எதிர்ப்பது என்று கொழும்பு தீர்மானித்து விட்டது.

அந்தப் பிரேரணைக்கு மாற்றாக தனக்கு ஆதரவான இன்னொரு பிரேரணை வடிவத்தை ஜெனிவா அமர்வில் சமர்ப்பிக்கவே கொழும்பு ஆரம்பத்தில் விரும்பியது.

அதாவது, வழக்கமாக இலங்கை தொடர்பான தீர்மானத்துக்குப் பிரேரணையை முன்மொழியும் நாடுகளுக்குப் போட்டியாக இலங்கையை ஆதரிக்கும் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதுதான் கொழும்பின் அந்தத் திட்டம்.

ஆனால், கொரோனாத் தொற்றுக்குள்ளான முஸ்லிம்களின் ஜனாஸாக்களையும் எரிப்பது என்ற தனது பேரினவாத பௌத்த, சிங்களத் திமிர்த்தனப் போக்கில் இருந்து தான் மாறாத வரை தன் சார்பாகக் கொண்டு வரப்படும் மனித உரிமைகள் தொடர்பான பிரேரணை எதனையும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் உள்ள முஸ்லிம் நாடுகள் கூட ஆதரிக்கா என்பது கோட்டா அரசுக்கு இப்போது புரிய ஆரம்பித்துள்ளது.

அதனால், போட்டிக்குப் பிரேரணையைக் கொண்டு வரும் திட்டத்தை அது கைவிட்டு விட்டது.

அதேசமயம், தனக்கு எதிராகப் பிரேரணையை முன்மொழிந்து அனுசரணைப் பணி வகித்து வரும் கனடா, பிரிட்டன், மொண்டிநிக்ரோ மற்றும் நோர்வே, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் வெளிப்படையாகப் பகைத்துக் கொள்ள – பகிரங்கமாக எதிர்ப்புக் காட்ட – கொழும்பு தயாரில்லை.

தனக்கு எதிராக மேற்குலகு கொண்டு வரும் பிரேரணையை ஆதரிக்க வேண்டாம் என்று நட்பு நாடுகளுக்கு தனிப்பட்ட முறையில் விளக்கி அவற்றின் ஆதரவைப் பெறவும் –

அதேசமயம், இலங்கைக்கு எதிரான கடும் நிலைப்பாட்டை எடுத்து, அதனைத் தனது அறிக்கையாக சமர்ப்பித்துள்ள மனித உரிமைகள் ஆணையாளரையும் மனித உரிமைகள் கவுன்ஸிலையும் போட்டுத் தாக்குவதற்கும் –

சிங்களத் தரப்பு – கொழும்பு அரசு – தயாராகி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆகவே ஜெனிவா யுத்த முனையை அதன் அங்கத்துவ நாடுகளுடனோ, தனக்கு எதிராகக் கருத்து தெரிவிக்கும் தரப்புகளுடனோ மோதுவதற்கான களமாக மாற்றாமல் தவித்துக் கொண்டு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கும், ஒட்டுமொத்த கவுன்ஸிலுக்கும் எதிராக மோதும் வகையில் மட்டும் திட்டம் வகுக்கின்றது கொழும்பு.

# தமிழர்கள் என்ற காரணத்தினாலேயே தமிழக மீனவரும் இலக்காகுகின்றனர்!

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் காட்டம்





நெடுந்தீவு கடற்பரப்பில் கடற்படையின் படகுடன் மோதுண்டு, மீன்பிடிப் படகு விபத்துக்குள்ளாகியதில் கடலில் மூழ்கி உயிரிழந்த இந்திய மீனவர்கள் நால்வருக்கு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இன்று (புதன்கிழமை) அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக் கழக வளாகத்தில் இந்த அஞ்சலி நிகழ்வு இன்று முற்பகல் 10.15 மணியளவில் இடம் பெற்றது.

குறித்த அஞ்சலி நிகழ்வின் இறுதியில் கண்டன அறிக்கை ஒன்றும் மாணவர்களால் வாசிக்கப்பட்டு, ஊடகங்களுக்கு வழங்கப் பட்டது. தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக் காகவே தமிழக மீனவர்கள் இலக்கு வைக் கப்படுகின்றனர் என்று கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் கொரோனா இன்றுடன் ஒருவருடம்!

இலங்கையில் முதலாவது கொரோனா நோயாளர் அடையாளம் காணப்பட்டு, இன்றுடன் ஒருவருடம் பூர்த்தியாகியுள்ளது.

நாட்டில் கடந்த 2020 ஜனவரி 27 ஆம் திகதி சீனாவின் ஹூபே மாகாணத்தைச் சேர்ந்த 44 வயதான பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது.

இலங்கையில் பதிவான முதல் கொரோனா தொற்று சம்பவம் இதுவாகும்.

சீனப் பெண்ணைத் தொடர்ந்து 2020 மார்ச் 10 ஆம் திகதி 52 வயதான உள்ளூர் சுற்றுலா வழிகாட்டியொருவர் கொரோனா தொற்றுக்குள்ளானார்.

2020 மார்ச் 28 அன்று கொவிட் வைரஸ் தாக்கத்தால் இலங்கையில் முதல் உயிரிழப்பு சம்பவம் நிகழ்ந்தது. அதன்படி மாரவில பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய நபர் கொவிட் தொற்றுக்குள்ளாகி அங்கொட தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

2020 மார்ச் 20 முதல் மே 11 ஆம் திகதி வரை 52 நாள்கள் நாடு தழுவிய ரீதியில் முடக்கல் நிலையில் இருந்தது. இந்த முடக்கல் நிலையானது ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெறவிருந்த பொதுத் தேர்தலையும் ஓகஸ்ட் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.



அதன் பின்னரான காலப் பகுதியில் இலங்கை சிறந்த முறையில் கெவிட் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி, உலக சுகாதார ஸ்தாபனத்தின் பாராட்டையும் பெற்றது.

எனினும் அதன் பின்னர் 2020 ஒக்ரோபர் 04 ஆம் திகதி மினுவாங்கொடை கொவிட் கொத்தணிப் பரவல் இலங்கையின் அனைத்து சுகாதார தடுப்பு சுவர்களையும் தகர்த் தெறிந்தது.

எவ்வாறெனினும் இந்த ஒரு வருட காலப் பகுதிக்குள் நாட்டில் உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 59 ஆயிரத்து 922 ஆகப் பதிவாகியுள்ளது.

அதேநேரம் கொரோனாத் தொற்றுக்குள்ளான 51 ஆயிரத்து 46 பேர் குணமடைந்துள்ளமையுடன், அத்துடன் 288 உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

# யாழ். நெடுந்தூர பஸ் நிலையம் மக்களிடம் கையளிக்கப்பட்டது!





யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்ப்பாணம் நெடுந்தூர பஸ் நிலையம் பொதுமக்களின் பாவனைக்காக இன்று (புதன்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா பணிப்பிற்கமைய, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண நெடுந்தூர பஸ் நிலைய திறப்பு விழா, யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள், மாநகரசபை ஆணையாளர், மாநகர சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

122 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இந்த பஸ் நிலையத்துக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பிரேஸிலில் பஸ் விபத்து 19 பயணிகள் உயிரிழப்பு!

பிரேஸில் நாட்டில் பஸ் ஒன்று மலைக்குன்றில் இருந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில் 19 பயணிகள் உயிரிழந்துள்ளனர்.

பரானா மாகாணத்தில் 53 பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் நிலை தடுமாறி மலைக்குன்றில் இருந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் 19பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயம் அடைந்த நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து பற்றி தகவல் அறிந்ததும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

# நிரம்பி வழியும் இந்தோனேசியா மருத்துவமனைகள்; கொரோனா தொற்றால் நோயாளிகள் இறக்கும் அவலம்

இந்தோனேசியாவில், கொரோனாப் பரவல் அதிகரித்து வருவதால், மருத்துவமனைகள் நிரம்பி வருகின்றன. இதனால் நோயாளிகளுக்கு மருத்துவமனைகளில் அனுமதி நிராகரிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்தோனேசியாவில் நாளொன்றுக்கு 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை கொரோனாப் பரிசோதனை செய்யப்படுகிறது. அதில் 30 சதவீதம் பேர் கொரோனவால் பாதிக்கப்படுகின்றனர்.தற்போது இந்தோனேசியாவில் ஒரு மில்லியன் மக்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை 28 ஆயிரத்து 468 பேர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், இந்தோனேசியா மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் கடந்த 6 மாதங்களாக 90 முதல் 100 சதவீதம் வரை நிரம்பி வழிகின்றன.

இதனால், மிக மோசமான நிலையில் நோயாளிகள் வந்தாலும், இடப் பற்றாக்குறை காரணமாக அவர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர். கொரோனா நோயாளிகள் மட்டுமின்றி பிற நோயாளிகளும் இதனால் அவதிப்பட்டு வருகின்றனர்.



இதனிடையே, சீனாவின் சினோவாக் தடுப்பூசி போடும் பணியை இந்தோனேசியா ஜனவரி 13 ஆம் திகதி தொடங்கியது. 18 முதல் 59 வயதுள்ள மக்களுக்கு முதலில் தடுப்பூசி போடப்படும் என்று இந்தோனேசியா அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா நெருக்கடி நீங்க 4- 5 ஆண்டுகள் ஆகும்

### சிங்கப்பூர் கல்வி அமைச்சர் பேச்சு



சிங்கப்பூரில் கொரோனா தொடர்பான நெருக்கடி நிலை நீங்குவதற்கு இன்னும் 4 முதல் 5 ஆண்டுகள் ஆகலாம் என அந்நாட்டு கல்வி அமைச்சர் லாரன்ஸ் வொங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கொரோனாவுக்கு பிந்தைய உலகம் எப்படி இருக்கும் என ஒருவராலும் கணிக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முகக்கவசம் அணிவது, தனிமனித இடைவெளி போன்ற கட்டுப்பாடுகள் இந்தாண்டு முழுவதும்தொடரும்எனக்குறிப்பிட்டலாரன்ஸ் வாங், உலகம் முழுவதும் கொரோனாத் தடுப்பூசிகள் கிடைப்பது எளிதாகவோ, விரைவாகவோ இருக்காது என்றும் குறிப்பிட்டார்.

# செயற்கை முறை கருத்தரிப்பில் பிறந்த சிங்கக்குட்டி

### போத்தலில் பாலூட்டும் பூங்கா பராமரிப்பாளர்கள்



சிங்கப்பூரில் உள்ள விலங்கியல் பூங்காவில் சிங்கக்குட்டிக்கு பராமரிப்பாளர்கள் போத்தலில் பாலூட்டும் காட்சி பலரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த ஒக்டோபரில் செயற்கை முறை கருத்தரிப்பில் பிறந்த சிங்கக்குட்டியை பூங்கா பராமரிப்பாளர்கள் கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வருகின்றனர். பிறந்து 3 மாதங்களே ஆகியுள்ள சிங்கக் குட்டியின் உடல்நிலை சீராக இருப்பதாகவும், எப்போதும் சுறுசுறுப்பாக விளையாடி வருவதாகவும் பராமரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்கு கடலில் மிதக்கும் படகு கண்டுபிடிப்பு

கடலில் மிதக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை எடுத்து மீள்சுழற்சி செய்யும் புதிய படகினை பிரான்ஸைச் சேர்ந்த ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

தி சீ கிளீனர்ஸ் என்ற குழுவைச் சேர்ந்த யுவான் போர்கனான் என்பவர் பிளாஸ்டிக் பொருள்களால் கடலில் மாசு ஏற்படுவதைக் கண்டு அதனை அகற்ற தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். அவரது குழுவினர், போட்டிகளில் பயன்படுத்தப்படும் பாய்மரப் படகில் சற்று மாற்றம் செய்து கடலில் மிதக்கும் கழிவுகளைஎடுத்துதரம்பிரிக்கின்றனர்.

பின்னர் அதிலிருந்து கிடைத்த பிளாஸ்டிக் கழிவுகளை மீள் சுழற்சி மூலம் மின்சாரமாக மாற்றி அதன் மூலம்தங்கள்படகினைஇலுத்துவதற்கு பயன்படுத்தி வருகின்றனர். இந்தக் கப்பலை2024ம்ஆண்டுமுதல்பயன்பாட்டுக்கு கொண்டு வர முடிவு செய்துள்ளதாக யுவான் தெரிவித்துள்ளார்.



# 2 ஆவது டோஸ் கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொண்டார் கமலா ஹரிஸ்

அமெரிக்க துணை அதிபர் கமலா ஹரிஸ் 2 ஆவது டோஸ் கொரோனாத்தடுப்பூசிபோட்டுக் கொண்டார்.



கடந்த டிசெம்பர் 29 ஆம் திகதி கொரோனா தடுப்பூசியின் முதல்டோஸைஎடுத்துக்கொண்ட அவருக்கு, ஒரு மாத இடைவெளியில் தற்போது 2 ஆவது டோஸ் செலுத்தப்பட்டது.

இதனையடுத்து அனைவரும் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டுமென அறிவுறுத்திய கமலா ஹரிஸ் தடுப்பூசி கொரோனாவில் இருந்து உயிரைக் காக்கும் என தெரிவித்தார்.

### கென்யாவில் அழியும் தருவாயில் உள்ள

# வெள்ளை காண்டாமிருகத்தின் இனத்தை மீட்க ஆராய்ச்சியாளர்கள் கடும் முயற்சி

கென்யாவில் அழியும் தருவாயில் உள்ள வெள்ளை காண்டாமிருகத்தின் இனத்தை மீட்க விஞ்ஞானிகள் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

உலகின் வடக்குப் பகுதியில் வாழ்ந்த வெள்ளைகாண்டாமிருகத்தின் இனம் வெகுவாக குறைந் துள்ள நிலையில், அதனை மீட்டெடுக்கும் வகையில் ஆராய்ச்சியாளர்களும், பாதுகாப்பு அமைப்புகளும் இணைந்துள்ளன.

முன்னதாக இறந்த ஆண் காண்டாமிருகத்தின் உயிரனுக்களை சேமித்து வைத்துள்ள விஞ்ஞானிகள், பெண் காண்டாமிருகத்தின் கருமுட்டைகளை சேமித்து செயற்கை இனப்பெருக்க நுட்பங்களைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளனர்.



# அமெ. உயிரியல் பூங்காவில் பனியில் உற்சாகமாக விளையாடும் யானைகள்



அமெரிக்காவில் கடும் பனிப் பொழிவுக்கு மத்தியில் யானைகள் குதூகலமாக விளையாடும் காட்சி காண்போரை வெகுவாக கவர்ந்துள்ளது.

அரிசோனா மாகாணத்தில் கடந்த சில தினங்களாக கடும் பனிப்பொழிவு நிலவி வரும் சூழலில், அங்குள்ள உயிரியல் பூங்காஒன்றில்யானைகள் குட்டையில் குளித்தும், பனிப்பொழிவுக்கு மத்தியில் விளையாடியும் மகிழ்ந்தது.

இந்நிலையில், குட்டியானை ஒன்று குட்டையில் குளித்தும், நிலத்தில் புரண்டும் விளையாடிய காட்சி காண்போரை நெழ்ச்சியில் ஆழ்த்தியது.

# அமெரிக்க அரசுக்கு சொந்தமான வாகனங்களை மின்சார வாகனங்களாக மாற்ற அதிபர் திட்டம்



அமெரிக்க அரசிடம் உள்ள சுமார் 6 லட்சத்து 50 ஆயிரம் வாகனங்கள், மின்சார வாகனங்களாக மாற்றப்படும் என்று அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிக்கும் விதமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில், அமெரிக்க மக்களுக்காக தயாரித்த மின்சார வாகனங்கள் வாங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் எவ்வளவு நாள்களில் இந்த வாகனங்கள் மாற்றப்படும் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. இதற்கு கிட்டத்தட்ட இலங்கை மதிப்பில் மூன்று லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜெயலலிதா நினைவிடம்; முதல்வர் திறந்துவைப்பு




முன்னாள் முதல்வா ஜெயலலிதாவின் நினைவிடத்தை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி இன்று புதன்கிழமை திறந்துவைத்தார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு டிசெம்பரில் மறைந்த முன்னாள் முதல்வா ஜெயலலிதாவின் உடல், சென்னை மெரினாவில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்துக்குள் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த இடத்தில் பிரம்மாண்ட அளவில் ஜெயலலிதாவுக்கு நினைவிடம் கட்டப்படும் என்று முதல்வா எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்திருந்தார்.

அதன்படி 50 ஆயிரத்து 422 சதுர அடி பரப்பளவில் இந்திய ரூ. 80 கோடி செலவில் நினைவிடத்துக்கான பணிகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வந்த நிலையில், பணிகள் நிறைவடைந்து இன்று நினைவிடம் திறக்கப்பட்டது.

முன்னதாக, எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது. அதையடுத்து, ஜெயலலிதா நினைவிடத்துக்கான கல்வெட்டினை முதல்வர் பழனிசாமி திறந்துவைத்தார். பின்னர் ஜெயலலிதாவின் நினைவிடத்தை திறந்துவைத்தார். துணை முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் உள்ளிட்ட அ.தி.மு.கவினர் உடன் இருந்தனர்.

தொடர்ந்து, ஜெயலலிதாவின் நினைவிடத்தில் முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

# டெல்லி பேரணியில் ஏற்பட்ட வன்முறை பஞ்சாப் முதல் மந்திரி கண்டனம்



டெல்லியில் டிராக்டர் பேரணி சென்ற விவசாயிகளில் ஒரு குழுவினர் செங்கோட்டையை முற்றுகையிட்டு தங்கள் கொடியையும் அதில் ஏற்றினர். இதனால் செங்கோட்டையில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. விவசாயிகள் போராட்டத்தால் டெல்லியின் சில பகுதிகளில் இணையதள சேவை துண்டிக்கப்பட்டது. மேலும் டெல்லியின் முக்கிய பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. அங்கு நேற்று நள்ளிரவு முதல் 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்படுள்ளது.

இந்நிலையில், டெல்லியில் விவசாயிகளின் டிராக்டர் பேரணியில் ஏற்பட்ட வன்முறை ஏற்கத்தக்கது அல்ல என பஞ்சாப் முதல் மந்திரி அமரீந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்றைய தினம் அமரீந்தர் சிங் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், விவசாயிகள் டிராக்டர் பேரணியில் ஏற்பட்ட வன்முறை அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக உள்ளது. அமைதியாக எதிர்ப்பு தெரிவிக்கும் விவசாயிகளால் உருவாக்கப்படும் நல்லெண்ணத்தை இது மறுக்கும் செயலாகும்.

அனைத்து உண்மையான விவசாயிகளும் டெல்லியை விட்டு வெளியேறி எல்லைகளுக்கு திரும்புமாறு கேட்டுக் கொள்கிறேன் என பதிவிட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய சுதந்திர தினத்தன்று இந்திய குடியரசுதினம் தற்செயலாக நிகழ்ந்த அதிசயம் – ஸ்காட் மாரிசன்

இந்தியாவில் 72 ஆவது குடியரசு தினவிழா தலைநகர் டெல்லியில் நேற்று கொண்டாடப்பட்டது. இதனிடையே ஆஸ்திரேலியாவில் சுதந்திர தினமும் நேற்று கோலாகலமாக அங்கு கொண்டாடப்பட்டது.

இந்நிலையில், ஆஸ்திரேலியாவின் சுதந்திர தினத்தன்று இந்திய குடியரசு தினமும் கொண்டாடப்படுவது தற்செயலாக நிகழ்ந்த அதிசயம் என்று ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரிசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், நண்பர்களுக்கு இடையே (இந்தியா – ஆஸ்திரேலியா), இருநாட்டு தேசிய தினங்களும் பகிரப்படுவதில் மகிழ்ச்சி. தேசிய நாள் மட்டுமல்லாமல் ஜனநாயகம், சுதந்திரம், பன்முகத்தன்மை என அனைத்தையும் இந்தியா – ஆஸ்திரேலியா பகிர்ந்துள்ளன என பதிவிட்டுள்ளார்.

# சசிகலா இன்று விடுதலை முடிவடைந்தது சிறைவாசம்



சொத்துக் குவிப்பு வழக்கில் நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனைக்குப்பிறகு சசிகலா இன்று விடுதலையானார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று பெங்களூரு – பரப்பன அக்ரஹாராத்தில் உள்ள மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த சசிகலாவுக்கு இன்றுடன் சிறைத் தண்டனை முடிவடைந்தது.

இதனைத் தொடர்ந்து சசிகலா சிகிச்சை பெற்று வரும் விக்டோரியா மருத்துவமனைக்கு சென்ற சிறைத்துறை அதிகாரிகள் சசிகலாவிடம் கையெழுத்து பெற்று விடுதலையை அறிவித்தனர்.

அபராதத் தொகையான இந்திய ரூ.10.10 கோடியை செலுத்தியதால், சிறையில் இருந்த நாள்களைக் கணக்கிட்டு சசிகலா தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார். சிறைத்துறை நடவடிக்கைகள் முடிந்ததால் மருத்துவமனையில் இருந்த சசிகலாவிடம் விடுதலையானதற்கான உத்தரவு வழங்கப்பட்டது.

தண்டனைக் காலம் முடிந்தாலும் சசிகலா விக்டோரியா அரசு மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெறுவார் என்று அவரது குடும்பத்தினர் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. பெங்களூருவில் இருந்தவாறே சிகிச்சை பெற்று பெப்ரவரி முதல் வாரத்தில் சசிகலா தமிழகம் திரும்புவார் என்றும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாவால் கடந்த 20 ஆம் திகதி விக்டோரியா அரசு மருத்துவமனையில் சசிகலா அனுமதிக்கப்பட்டார். அவரை மருத்துவர்கள் கண்காணித்து வரும் நிலையில், சசிகலா உடல் நிலை சீராக உள்ளது எனவும் மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சசிகலாவிற்கு இன்று மீண்டும் கொரோனா பரிசோதனை செய்யப்படுகிறது. இதில் அவருக்கு ‘நெகடிவ்’ என தெரியவந்தால், சாதாரண பிரிவுக்கு அவர் மாற்றப்படுவார் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலா, இளவரசி, சுகாகரன் ஆகியோருக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சசிகலா விடுதலையைத் தொடர்ந்து இளவரசி, சுகாகரன் ஆகியோரும் விரைவில் விடுதலை செய்யப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆஸ்கர் விருதுக்கான போட்டி ‘சூரரைப் போற்று’ திரைப்படம்



சூர்யா நடிப்பில் சென்ற வருடம் தீபாவளிக்கு வெளியாகி வெற்றி பெற்ற படம் ‘சூரரைப்போற்று’. சுதா கொங்கரா இயக்கி இருந்த இப்படம் ஏர் டெக்கான் நிறுவனத்தை ஆரம்பித்த ஜி.ஆர்.கோபிநாத்தின் வாழ்க்கையில் நிகழ்ந்த சில சுவாரஸ்யமான நிகழ்வுகளை மையப்படுத்தி உருவாக்கப்பட்டிருந்தது. தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் உருவாகிய இப்படத்தை 2டி என்டர்டெய்ன்மெண்ட் நிறுவனம் தயாரித்திருந்தது.

கடந்த ஆண்டு ஓ.டி.டி. தளத்தில் வெளியான படங்களில் அதிகம் பேரால் பார்க்கப்பட்ட தமிழ் திரைப்படம் என்ற சாதனையை சூரரைப் போற்று படைத்தது.

இந்நிலையில் ‘சூரரைப் போற்று’ திரைப்படம் ஆஸ்கர் போட்டியில் களமிறங்கியுள்ளது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த முறை ஆஸ்கர் போட்டியில் சில மாற்றங்களைச் செய்துள்ளனர்.

அதன்படி ஓ.டி.டி. தளங்களில் வெளியான படங்களும் கூட ஆஸ்கர் போட்டியில் பங்கேற்கலாம்.

# அயோத்தியில் புதிய பிரமாண்ட மசூதிக்கு அகமதுல்லா ஷாவின் பெயர் பரிந்துரை



அயோத்தியில் சர்ச்சைக்குரியதாக இருந்த நிலம் யாருக்கு சொந்தமானது என்ற மேல்முறையீட்டு வழக்கை உயர் நீதிமன்றம் விசாரித்து 2019 ஆம் ஆண்டு, நவம்பர் 9 ஆம் திகதி தீர்ப்பு அளித்தது.

அந்த நிலத்தை, ராம்லல்லாவுக்கு (குழந்தை ராமர்) வழங்கி உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததோடு, முஸ்லிம்களுக்கு மசூதி கட்டிக்கொள்வதற்கு 5 ஏக்கர் மாற்று இடம் வழங்க வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அந்த தீர்ப்பின்படி, பாபர் மசூதி அமைந்திருந்த இடத்தில் இருந்து 20 கி.மீ. தொலைவில், தான்னிப்பூர் கிராமத்தில் 5 ஏக்கர் நிலம் புதிய மசூதி கட்டுவதற்காக வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தில், உத்தரப்பிரதேச மாநில சன்னி வக்பு வாரியம் அமைத்துள்ள அறக்கட்டளை புதிய மசூதியை கட்ட இருக்கிறது. இதற்காக உத்தரப்பிரதேச மாநில சன்னி வக்பு வாரியம் இந்தோ இஸ்லாமிய கலாசார அறக்கட்டளையை நிறுவி உள்ளது.

புதிய மசூதி வளாகத்தில் பன்முகச் சிறப்பு மருத்துவமனையுடன், தாதியர் கல்லூரியும், மருத்துவ சார்பு கல்லூரியும் அமைக்கப்பட உள்ளதாக தகவல்கள் ஏற்கனவே வெளியானவை குறிப்பிடத்தக்கது.

ஒரே நேரத்தில் 2 ஆயிரம் பேர் அமர்ந்து தொழுகை நடத்தும் வசதியுடன் பிரமாண்டமாக கட்டப்படும் இந்த மசூதிக்கு யார் பெயர் சூட்டுவது என்ற கேள்வி எழுந்தது. அதற்கு இப்போது விடை கிடைத்துள்ளது.

இந்த மசூதிக்கு 1857 ஆம் ஆண்டு, ஆங்கிலேய அரசுக்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற சிப்பாய் கலகத்தில் பங்கு பெற்றிருந்த வீரர் மவுலவி அகமதுல்லா ஷாவின் பெயர் சூட்டப்படலாம் என தெரியவந்துள்ளது.

அவாத் பிராந்தியத்தில் சிப்பாய் கலகத்தின் கலங்கரை விளக்கம் என அழைக்கப்பட்டவர் இந்த மவுலவி அகமதுல்லா ஷா ஆவார். இந்த தகவலை அறக்கட்டளையின் செயலாளர் அதர் உசேன் தெரிவித்துள்ளார்.

பாபர் மசூதிக்கு பதிலாக கட்டப்படுகிற இந்த மசூதி மவுலவி அகமதுல்லா ஷாவின் பெயரை சுமந்து நிற்கும். பல்வேறு தரப்பில் இருந்து இந்த பெயரைத்தான் புதிய மசூதிக்கு சூட்ட வேண்டும் என்று கோரிக்கைகள் குவிந்து இருக்கின்றனவாம். இது தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு விரைவில் அதிகாரபூர்வ முடிவு வெளியாகும் என தகவல்கள் கூறுகின்றன.

இவர் 1858 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 5 ஆம் திகதி வீர மரணம் அடைந்தவர் என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. அவருடைய வீர தீரம் பற்றி ஆங்கிலேய அதிகாரிகளான ஜார்ஜ் புரூஸ் மல்லேசன், தாமஸ் சீட்டன் குறிப்பிட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழரின் தனித்துவ யாழ்.மாவட்டத்தில் தமிழ் மொழிக்கு இரண்டாம் இடமா?

## தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை கடும் கண்டனம்

யாழ்.நகரில் புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ள நெடுந்தூர போக்குவரத்துகளுக்கான பஸ் நிலையத்தில் போடப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களுக்கான பெயர் பலகைகளிலும் சிங்கள மொழிக்கு முதலுரிமையும், தமிழ் மொழிக்கு இரண்டாம் இடமும் வழங்கப்பட்டுள்ளமைக்கு தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ்.நிஷாந்தன் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கையில் வடக்கு, கிழக்கில் நிர்வாக மொழியாக முதல் தமிழ் மொழி உள்ள போதிலும் இலங்கை அரச திணைக்களங்கள் தமிழ் மொழியின் முதன்மைத் தன்மையைப் புறக்கணித்து இரண்டாவதாக பின்தள்ளியுள்ளமை மக்கள் மத்தியில் மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் முற்று முழுவதுமாக தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்ட மக்களே வாழ்கின்ற ஒரு நிலை இருந்தும் அரச திணைக்களங்களின் இவ்வாறான பொறுப்பற்ற நடவடிக்கைகள் தமிழ் உணர்வாளர்களையும், மக்களையும் மனவேதனைக்குள்ளாக்கியுள்ளது.

எனவே, சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் தனிச் சிங்கள மாவட்டங்களில் தமிழ் மொழியை முதல் மொழியாகப் போட்டால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? அல்லது போடத்தான்விட்டிருப்பார்களா? இதை இந்த சிங்களப் பேரினவாத அரசும், அதன் அரச திணைக்களங்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, தமிழ் மக்களின் தாய் மொழியை இரண்டாம் நிலைப்படுத்தும் சம்பந்தப்பட்ட அரச திணைக்களத்தின் இந்தச் செயலை வன்மையாக எதிர்ப்பதுடன், கடும் கண்டனத்தையும் பேரவையினராகிய நாம் பதிவு செய்துகொள்கின்றோம்.

மேலும் யாழ்.மாநகர சபை இந்த விடயத்தைக் கவனத்திலெடுத்து சபையின் அனுமதியைப்பெற்று சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கு உரிய முறையில் தெரிவித்து மீண்டும் தமிழ் மொழி முதலாவதாக மாற்றப்பட்ட புதிய பெயர்ப் பலகையை மாற்றியமைக்க ஆவண செய்ய வேண்டுமென வலியுறுத்துகின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் யோசனைக்கு சுங்க தொழிற்சங்கம் எதிர்ப்பு!

ஊழல் நிறைந்த அதிகாரிகளை அகற்றுவதற்கான தீர்வாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்ட மூன்றாம் தரப்பு அல்லது இராணுவத்தை கடமைகளில் ஈடுபடுத்துவதற்கான யோசனையை சுங்கத் தொழிற்சங்கங்கள் எதிர்த்துள்ளன.

சர்வதேச சுங்க தினமான நேற்று சுங்கத் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போதே இந்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சமீபத்திய கருத்துக்கள் தொடர்பாகத் தமது முழு அதிருப்தியையும், கடுமையான கவலையையும் தாம் வெளிக்காட்டுகின்றனர் என சுங்க தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

சுங்க அதிகாரிகள் பொதுவாக ஊழல் மிக்கவர்கள் என்று ஜனாதிபதி கூறுகின்றமை நியாயமில்லை என்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

சுங்கத்திணைக்களம், இலங்கையின் வரி வருவாயில் 50 வீதத்துக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டுகின்றது.

இந்தநிலையில், நாட்டின் முதல் குடிமகனிடமிருந்து இது போன்ற கருத்துக்களைக் கேட்க மனச்சோர்வு ஏற்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொரோனாத் தொற்றால் 10 கைதிகள் சாவடைவு!

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளாதாக, சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகுபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகின்ற நிலையிலும், புதிதாக ஒரு மரணம் பதிவாகியுள்ளது.

நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களில் ஏழு பேர் சிறைச்சாலை கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் ஆவர்.

இந்நிலையில் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் 5 அதிகாரிகள் உட்பட 158 பேரே இது வரையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இவ்வாறு சிகிச்சைப் பெற்றுவந்தவர்களில் 129 சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 4 ஆயிரத்து 114 பேர் குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, வைரஸ் பரவல் காரணமாக சிறைச்சாலைகளில் 4 ஆயிரத்து 418 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதற்கமைய 134 சிறைச்சாலை அதிகாரிகள், 495 ஆண் சிறைக் கைதிகள், 11 பெண் சிறைக் கைதிகள் , 3 ஆயிரத்து 544 ஆண் விளக்கமறியல் கைதிகள், 234 பெண் விளக்கமறியல் கைதிகளுமே இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

சயன்ஸ் அக்கடமி
SCIENCE ACADEMY NALLUR ARIYALAI JAFFNA
நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக நாவலர் வீதி, அரியாலை
தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற் தர நிறுவனம்
நிகரற்ற சிறப்பான நிர்வாக கட்டமைப்பின் கீழ் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில் 40 வருடங்களுக்கு மேலான கல்வி பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் சாதனை ஆண்டில் தொடர்கின்றது.
புதிய கல்வியாண்டு - 2021
வெற்றித்தேர்வு ஆரம்ப பிரிவு தரம் 1 முதல் தரம் 5 வரை வாராந்தம் பரீட்சைகளோடு
தமிழ் மொழி மூல வகுப்புகள் தரம் 6 முதல் O/L வரை
ENGLISH MEDIUM CLASSES GRADE 6 - O/L
இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும்
ஆரம்பம் - 28.01.2021 வியாழக்கிழமை காலை 9.00 மணி
இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள்!
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"
077 5388471, 077 3126807, 021 222 9016

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1976.030.31 | பிறந்த திகதி - 1990.06.10 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - ரேவதி | நட்சத்திரம் - பூராடம் |
| செவ் - ------- | சூ/செவ் - 8 இல் |
| பாவம் - 8 1/4 | பாவம் - 54 |
| கல்வி - A/L | கல்வி - கனடா பட்டதாரி |
| தொழில் - பிரான்ஸ் PR | தொழில் - கனடா PR |
| எதிர்பார்ப்பு - பிரான்ஸ் வரவிரும்பும் பெண் | எதிர்பார்ப்பு - கனடா வர மணமகன் தேவை |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!
நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=



கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.01.2021இல் வெளியிடப்பெற்றது.